செ.வெ.எண்: 39/2021 நாள்: 20.11.2021

பத்திரிக்கை செய்தி

**திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் செயல்படுத்தப்படும் மாநில மற்றும் ஒன்றிய அரசு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஊரசு வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் திரு.பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டார்.**

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் செயல்படுத்தப்படும் மாநில மற்றும் ஒன்றிய அரசு வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஊரசு வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் திரு.பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.11.2021) கள ஆய்வு மேற்கொண்டார்.

ஆரணி ஊராட்சி ஒன்றியம் - அரியபாடி ஊராட்சியில் பிரதம மந்திரி கிராம் சதக் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.268.23 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் சாலை பணி, மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம் - காட்டுக்காநல்லூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் சுமார் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெறும் காடு வளர்ப்பு, பண்ணை குட்டை அமைத்தல், ஊறிஞ்சி குழி அமைத்தல் ஆகிய பணிகள், போளூர் ஊராட்சி ஒன்றியம் - கஸ்தம்பாடி ஊராட்சியில் பழங்குடியினருக்கான பசுமை வீடுகள் கட்டும் பணிகள், வெண்மணி ஊராட்சியில் வடகிழக்கு பருவ மழை 2021 பாதிப்பு பணிகள், ஜல் ஜீவன் மிஷன் திட்ட பணிகள், கலசபாக்கம் ஊராட்சி ஒன்றியம் - சிறுவள்ளூர் ஊராட்சியில் வடகிழக்கு பருவ மழை 2021 பாதிப்பு பணிகள், துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் - கிளியாப்பட்டு ஊராட்சியில் பண்ணை குட்டை அமைத்தல், வள்ளிவாகை ஊராட்சியில் நாற்றங்கால் பண்ணை மற்றும் ஜல் ஜீவன் மிஷன் திட்ட பணிகள், நூக்காம்பாடி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கட்டப்பட்ட சிமெண்ட் கான்கீரிட் தடுப்பணை, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம் - காட்டாம்பூண்டி ஊராட்சியில் மாவட்ட நாற்றங்கால் கூட்டு பண்ணை பணிகள மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் சேகரிப்பு பணி ஆகியன ஆய்வு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையை சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் வளர்ச்சி பணிகள் மீதனா ஆய்வு கூட்டம் நடத்தினார். இக்கூட்டம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.பா.முருகேஷ் இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.மு.பிரதாப் இ.ஆ.ப.முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மகளிர் திட்ட இயக்குநர் திருமதி பெ.சந்திரர், செயற்பொறியாளர் (ஊ.வ) பெ.ராமகிருஷ்ணன மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையை சேர்ந்த உதவி இயக்குநர் / உதவி செயற்பொறியுாளர் நிலையிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை.**